Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

### GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to Aug. 14 : 781 Nos.
  - Up to Jul. 14 : 774 Nos.
- **Performance Aug. 14 …**
  - Turnover growth : 5.72%
  - Employment growth : -2.49%
  - 100% Attendance : 31.05%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

### OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## பெருமை!

ஒரு ராஜா இருந்தான், அவன் கதைகள் கேட்பதில் மிகவும் விருப்பமுள்ளவன், அவனுக்கு ஒவ்வொரு நாள் இரவும் புதிய புதிய கதைகளைக் கேட்கவேண்டும், முன்னர் கேட்ட பழைய கதையையே யாரேனும் சொன்னால் ராஜா, கதை சொன்னவரைச் சிறையிலடைத்துவிடுவான். இதனால் ராஜாவுக்குக் கதைகள் சொல்ல யாரும் முன்வரவில்லை, ஒரு நாள் இரவு, இளைஞன் ஒருவன் ராஜாவிடம் வந்தான். கதை சொல்ல விரும்புவதாக சொன்னான். சரி, இவனும் சிறைக்குத்தான் போகப் போகிறான் போலிருக்கிறது” என்று நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்ட ராஜா கதை சொல்ல அனுமதித்தான். வசதியாக அமர்ந்த இளைஞன் கதை சொல்ல ஆரம்பித்தான். “ நீண்ட காலத்திற்கு முன்னால் என்னுடைய தாத்தாவும், உங்களுடைய தாத்தாவும் சேர்ந்து ஒரு மாட்டுக் கொட்டிலைக் கட்ட ஆரம்பித்தார்கள், அது எவ்வளவு பெரிய கொட்டில் தெரியுமா? ஒரு அணிலுக்கு அந்தக்கொட்டில் கூரையின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்குச் செல்ல ஒரு நாள் ஆகும்! இப்படிப்பட்ட கொட்டிலைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ராஜா வியப்புடன், “இல்லை” என்று பதிலளித்தான். அப்படியானால், இரவு வணக்கம், நான் நாளை வருகிறேன்!” இளைஞன் மறுநாள் இரவு வந்தான், வேறொரு கதை சொல்லத் தொடங்கினான், நேற்று நம் தாத்தாக்கள் கட்டிய மாட்டுக் கொட்டிலைப் பற்றிக் கூறினேன் அல்லவா? இன்று அவர்கள் வளர்த்த காளை மாட்டைப் பற்றிக் கூறுகிறேன், அந்தக் காளை மிகப் பெரிது! ஒரு சிட்டுக்குருவி அந்த மாட்டின் ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குப் பறந்து செல்வதற்கு ஒரு நாள் ஆனது! இப்படிப்பட்ட ஒரு காளையைப் பற்றி உங்கள் தாத்தாவிடமிருந்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?” ஆச்சரியம் தளராமல் ராஜா, “நான் கேள்விப்பட்டதே இல்லையே!” என்று கூறினார். சரி! இன்று நீங்கள் படுத்துத் தூங்குங்கள், நான் நாளை இரவு வருகிறேன்!” என்று இளைஞன் விடை பெற்றுச் சென்றான். அன்றிரவு அரசனுக்கு தூக்கமே வரவில்லை. “இந்த இளைஞன் மிகவும் தந்திரகாரனாக இருக்கிறானே, இருக்கட்டும் நான் எப்படிப்பட்டவன் என்பதை நாளைக்குக் காட்டுகிறேன்! என்று நினைத்துக் கொண்டான்.

மறுநாள் ராஜா தன் மந்திரிகளை அழைத்துச் சொன்னான: “இன்று இரவு என் அறைக்கு வாருங்கள், அந்த இளைஞன் சொல்லும் கதையைக் கேளுங்கள், அவன் என்ன சொன்னாலும், “இதெல்லாம் எங்களுக்கு ஏற்கனவே தெரியும், இது பழைய கதை என்று சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான். இளைஞன் மூன்றாவது நாள் வந்து கதை சொல்ல ஆரம்பித்தான். “உங்கள் தாத்தாவும் என் தாத்தாவும் பக்கத்து பக்கத்து நாட்டை ஆண்டு வந்தார்கள். அப்போது, உங்கள் தாத்தா, என் தாத்தாவிடமிருந்து நாற்பது பீப்பாய் நிறையத் தங்கம் கடன் வாங்கினார், இது பற்றி எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?” மந்திரிகளெல்லாம் ஒரே குரலில், “ஓ! நாங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோமே! என்று சொன்னார்கள். இளைஞன் சொன்னான்: “நல்லது ராஜாவே! உங்கள்

## FUNCTIONAL WISHES



**Gandhi Jayanthi**
**02nd OCTOBER**



**Ayudha Pooja**
**02nd OCTOBER**



**Bakrid**
**05th OCTOBER**

**Diwali**
**23rd OCTOBER**



**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. P.S. Sridhar**<br>Production – Fib Tec | **01st Oct.** |
| **Mr. M. Vigneshwaran**<br>Production – Fib Tec | **03rd Oct.** |
| **Mrs. R. Jayanthi**<br>Purchase | **10th Oct.** |
| **Mr. K. Murugan**<br>Coating | **10th Oct.** |
| **Mr. K. Venkatesan**<br>MSE | **11th Oct.** |
| **Mr. G. V. Gopal Rao**<br>MSE | **16th Oct.** |
| **Mrs. K. Shreemadhi**<br>HRD | **16th Oct.** |
| **Mrs. K. Easwari**<br>Coating | **21st Oct.** |
| **Mr. R. Martin Richard**<br>MSE | **31st Oct.** |

**Best Wishes from Tiaano Employees**

தாத்தா கடன் வாங்கியதை உங்கள் மந்திரிகளே ஒத்துக் கொள்கிறார்களே! உடனே அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்!''.

இதைக் கேட்டதும் ராஜா பெரும் அதிர்ச்சியடைந்தான். இளைஞனைச் சிறையில் அடைக்க எண்ணியிருந்ததையெல்லாம் மறந்து விட்டான். இளைஞன் கேட்ட தங்கத்தைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டான். ஆனால் எவ்வளவோ முயன்றும் ஒரு பீப்பாய் தங்கத்தைத்தான் அவர்களால் சேகரிக்க முடிந்தது. இது போதுமென்று திருப்தியோடு வீடு திரும்பினான் இளைஞன். இதற்குப் பிறகு, கதை சொல்ல வருபவர்கள், ஏற்கனவே கேட்டக் கதையைச் சொன்னாலும் ராஜா, அவர்களுக்கு பரிசுகள் கொடுப்பார். நண்பர்களே! மேற்கண்ட கதையிலிருந்து நமக்கு புலப்படுகிற உண்மையான சத்தியம் என்னவெனில் நம்மில் சிலர் தம்மைத்தாமே அதிக புத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டு, மற்றவர்களை அவமானபடுத்த வேண்டும், தண்டிக்க வேண்டுமென்று நினைக்கிறோம், உயர்ந்தவன் மேல் உயர்ந்தவன் ஒருவன் காவலாளியாயிருக்கிறான். நமக்கு மட்டுமே மிகுந்த ஞானம் இருக்கிறதென்று நினைத்து மற்றவர்களை அற்பமாக எண்ணுதல் கூடாது. இரண்டாவது உண்மை என்னவெனில் உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் கூறவேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையாயினும் உண்மையை மட்டுமே பேசினால் இறைவன் நம்மை சகல தீங்கிலிருந்தும், நஷ்டத்திலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் விடுவித்து நம்மை வழி நடத்துவார்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு ஞானி மரணப்படுக்கையில் இருந்தார். அவர் இன்னும் கொஞ்ச காலம் வாழ வேண்டுமென்று சீடர்கள் வேண்டினார்கள். "நான் இருப்பதால் என்ன பயன்?'' என்றார். "நீங்கள் இருந்தால் எங்கள் ஆத்ம தாகத்தை தீர்ப்பீர்கள்'' என்றார்கள் சீடர்கள்.

அந்த ஞானி அமைதியாய்ச் சொன்னார், "நான் செய்ததெல்லாம் நதிக்கரையில் அமர்ந்து கொண்டு தண்ணீரைச் செம்புகளில் மொண்டு விநியோகம் செய்ததுதான். நான் நகர்ந்து கொண்ட பிறகாவது நீங்கள் நதியை நேராகப் பாருங்கள்''.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### உண்மையான பார்வை!!!

ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்கு கண் பார்வை கிடையாது. அப்போது அந்த வழியாக வந்த ஒருவன்,''ஏய் கிழவா, யாராவது இந்த வழியாக சென்றார்களா?'' என்று மரியாதையின்றி அதிகாரத்துடன் கேட்டான்.

அந்த துறவி "அப்படி யாரும் சென்றதாக தெரியவில்லை'' என்று சொன்னார் சிறிது நேரம் கழித்து, மற்றொருவன் வந்து "ஐயா, இதற்கு முன் யாராவது சென்றார்களா?'' என்று கேட்டார். அதற்கு அத் – துறவியோ'' ஆம், சற்று முன் இதே கேள்வியைக் கேட்டு சென்றான்'' என்றார். மீண்டும் சிறிது நேரம் கழித்து இன்னொருவன் வந்தான். அவனும் துறவியிடம் "வணங்குகிறேன், துறவியாரே, இதற்கு முன்

## தெரிந்து கொள்வோம்

### Blood Types

| Type | You can Give Blood To | You can Receive Blood From |
|---|---|---|
| A+ | A+, AB+ | A+, A-, O+, O- |
| O+ | O+, A+, B+, AB+ | O+, O- |
| B+ | B+, AB+ | B+, B-, O+, O- |
| AB+ | AB+ | Everyone |
| A- | A+, A-, AB+, AB- | A-, O- |
| O- | Everyone | O- |
| B- | B+, B-, AB+, AB- | B-, O- |
| AB- | AB+, AB- | AB-, A-, B-, O- |

### நமது உடலை பற்றி தெரிந்ததும் தெரியாததும்...

- நமது மூக்கினால் 50 ஆயிரம் விதமான வாசனைகளை நுகர முடியும். ஆனால் தூங்கும் போது நமது மூக்கினால் வாசனை பிடிக்க முடியாது.
- நமது மூளை 80 சதவீதம் தண்ணீரால் ஆனது. பகலைவிட இரவில் மூளை சுறுசுறுப்பாக இருக்கும். அதிகமாக சிந்தனைகள் தோன்றும். வலி என்ற உணர்வே மூளையின் உதவியால் தான் உணரப்படுகிறது. ஆனால் மூளையில் காயம்பட்டால் வலி தெரியாது.
- நாம் ஒரு அடியை எடுத்து வைக்கும் போது நமது உடலில் 200 தசைகள் செயல்படுகின்றன.
- பிறக்கும் போது நமது உடலில் 300 எலும்புகள் இருக்கின்றன. ஆனால் வளர்ச்சி அடைந்த மனித உடலில் 206 எலும்புகளே உள்ளன. பல எலும்புகள் ஒன்றிணைந்து விடுவது தான் இதற்கு காரணம்.

  எலும்புகள் வலிமையானவை என்று எண்ணுகிறீர்களா? அதன் வெளிப்புறமே கடினமானது. உட்புறம் எலும்புகள் மென்மையாகத்தான் இருக்கும். ஏனெனில் எலும்புகள் 75 சதவீதம் தண்ணீரால் ஆனது. மனித எடையில் எலும்புகளின் பங்கு 14 சதவீதமாகும்.
- நமது ரத்தம் தண்ணீரை விட 6 மடங்கு அடர்த்தியானது. பெண்களின் உடலில் 4.5 லிட்டர் ரத்தமும், ஆண்களின் உடலில் 5.6 லிட்டர் ரத்தமும் காணப்படுகிறது.

Collected from Internet

இந்த வழியாக யாராவது செல்லும் சப்தம் கேட்டதா?” என்று பணிவுடன் கேட்டான்.

உடனே துறவி “மன்னரே, வணக்கம். இந்த வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான், அடுத்ததாக ஓர் அமைச்சர் சென்றார். இருவருமே நீங்கள் கேட்ட கேள்வியை கேட்டுச் சென்றனர்.” என்று சொன்னார். அப்போது ஆச்சிரியத்துடன் மன்னர் “துறவியாரே, உங்களுக்குத் தான் பார்வை இல்லையே. பின்னர் எப்படி முதலில் ஒரு வீரனும், அடுத்ததாக அமைச்சர் என்றும் சரியாக சொன்னீர்கள்” என்று கேட்டான்.

அதற்கு துறவி “இதை அறிவதற்கு பார்வை தேவையில்லை. அவரவர் பேசுவதை வைத்தே, அவர் யார், அவரது தகுதி என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்” என்று சொல்லி, “முதலில் வந்தவன் சற்றும் மரியாதையின்றியும், அடுத்து வந்தவரின் பேச்சில் அதிகாரமும், உங்களது பேச்சில் பணிவும் தென்பட்டது” என்று பொறுமையாக விளக்கிக்கூறினார்.

Compiled By : Mrs. S. Sasi Rekha
Marketing

### பாசம்

- மகளை கொஞ்சும் போது குத்தக் கூடாது என்பதற்காக தினமும் சவரம் செய்வது தந்தையின் பாசம்.
- மகளுக்கு குடையாக வேண்டும் என்றே சேலை முந்தானையை பெரிதாக விட்டு சேலை கட்டுவது அன்னையின் பாசம்.
- பேத்திக்கு தொட்டில் கட்ட வேண்டும் என்றே தன் மணநாள் பட்டுச் சேலையை பத்திரப்படுத்துவது பாட்டியின் பாசம்.
- பேரனுக்கு தும்மல் வந்து விடும் என்று அவனைக் கண்டதும் மூக்குப் பொடியை ஒளித்து வைப்பது தாத்தாவின் பாசம்.
- தங்கைக்காக கிரிக்கெட் சேனலை விட்டுகொடுத்து சேனலை மாற்றுவது அண்ணனின் பாசம்.
- அண்ணனின் தவறுக்கு தந்தையிடம் திட்டு வாங்குவது தங்கையின் பாசம்.
- தனக்கு பிடித்ததை தன் தம்பிக்கு கொடுத்து அழகு பார்ப்பது அக்காவின் பாசம்.
- சொர்க்கத்தை மண்ணில் காட்டுவது பாசம் நிறைந்த குடும்பம்.

Compiled By : Mrs. M. Indumathy
Purchase

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XXXIII)

### ஒரு கப் செய்டன்

ஆனால், உடுப்பி ஹோட்டல்களில் ஒரு நாள் வருமானம் என்னவோ அதைப்போலப் பத்து மடங்கு இந்தக் காபி பார்களில் சர்வ சாதாரணமாகக் கிடைத்திருக்கிறது. எப்படி?

இதற்கு முதல் காரணம் இடம். இளைஞர்கள்தான் தங்களுடைய இலக்கு என்று தீர்மானித்த பிறகு, அவர்கள் நிறைய புழங்குகிற பிரதானமான பகுதிகள் என்னென்ன என்பதைக் கவனித்து அங்கே தான் இது போன்ற காபி பார்கள் அமைக்கப்படுகின்றன.

## கவிதைகள்

### முயற்சி

முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும்
ஆனால் முயலாமை
என்றும் வெல்லாது...

Compiled By : Mr. B.P. Karthik
Facilitation

### சுதந்திரம்

சுதந்திரம் என்பது பிறரிடமிருந்து கேட்டு பெறுவது அல்ல
சுதந்திரம் என்பது பிறர்க்குகாக கற்று உருவாக்குவது...

### பெண்மை



பெண்மை என்பது மென்மை,
பறவையின் இறகு கூட தோற்கும்,
தாயின் வருடலில்...

பெண்மை என்பது உண்மை,
பொய்யான பாசங்கள் கூட தோற்கும்,
தாயின் உண்மையான அன்பில்...

பெண்மை என்பது கருணை,
கடவுள் கூட தோற்றுப் போவான்,
தாயின் கருணையில்...

பெண்மை என்பது பெருந்தன்மை,
தெய்வம் கூட மன்னிக்க மறுக்கும்
தவறுகளை,
தாய்மை மன்னிக்கும்...

Compiled By : Miss. T. Regi
Facilitation

## சிந்தனைக்கு

எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால், பலவீனர்கள் ஆவீர்கள்; வலிமையானவர்களாக நினைத்தால், வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள்; தூய்மையற்றவர்களாக எண்ணினால், தூய்மையற்றவர் ஆவீர்கள், தூய்மையானவர்களாக எண்ணினால், தூயவர் ஆவீர்கள்.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

ஆனால், இப்படி நகரின் மையப் பகுதிகளில் கடை அமைப்பது என்றால் சாதாரண விஷயம் இல்லை. லட்சக்கணக்கில் வாடகை கொடுக்க வேண்டியிருக்கும். அதற்கு மேல் அலங்கார செலவுகள் எல்லாம் இருக்கின்றன. அதனால்தான் சிறியகடை, அதை முடிந்த வரை நன்கு பயன்படுத்தி அதிக லாபம் என்கிற சூத்திரத்தில் இந்தக் கடைகள் நம்பிக்கை கொண்டிருக்கின்றன.

இந்த சிறிய இடத்துக்குள் தான், வாடிக்கையாளர்கள் உட்கார்வதற்கான நாற்காலி, மேஜைகள் போடவேண்டும். காபி தயாரிக்கிற இயந்திரம், பிற உணவு பொருள்கள் எல்லாவற்றையும் வைக்கவேண்டும்.

இதிலும், காபி பார்கள் ஓர் எழுதப்படாத விதியைப் பின்பற்றுகின்றன. கடையில் சுமார் எண்பது சதவிகித இடம், வாடிக்கையாளர்களுக்காக ஒதுக்கப்படுகிறது. ஓரத்தில் இத்துனூண்டு ரிப்பன் போல் மிச்சமிருக்கிற இடம் தான், கடைசி சிப்பந்திகளுக்கு.

வாடிக்கையாளர்களுக்கான நாற்காலிகளைத் தேர்வு செய்வதிலும் சில தந்திரங்கள் உண்டு. கடையின் இரண்டு மூலைகளில், 'பளிச்' சென்று பார்வையில் தெரியும்படியாக மெத்துமெத்தென்ற சோபாக்கள், விஸ்தாரமான டீப்பாய்களை வைத்திருப்பார்கள். இவைத் தவிர, மிச்சமிருக்கும் நாற்காலிகள் மேஜைகள் எல்லாமே சின்னஞ்சிறியதாக இருக்கும்.

எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்றால், கடைக்கு வருகிற வாடிக்கையாளர்கள் இது போன்ற சோபாக்களால் உடனடியாகக் கவரப்படுவார்கள். அவற்றின் இதமான சொகுசில் உட்கார்ந்தபடி சூடாகக் காபியை உறிஞ்சுவது விலை மதிக்க முடியாத சுகம். இதற்காகவே திரும்பத் திரும்ப அதே கடைக்கு வருகிறவர்கள் கூட இருப்பார்கள்.

ஆனால், மொத்தக் கடையிலும் இரண்டு அல்லது மிஞ்சிப் போனால் மூன்று சோபாக்கள் தான் இருக்கும். அவை நிரம்பி விட்டால், திரும்பிப் போகவா முடியும்? வேறு வழியில்லாமல் சிறிய, சவுகரியமல்லாத நாற்காலிகளில் உட்கார்ந்து கொள்ள வேண்டியதுதான்.

அதாவது, சில சோபாக்களைத் தூண்டிலாகக் காட்டி வாடிக்கையாளர்களை இழுத்துவிட்டு, மிச்சமிருக்கிற பகுதிகளையெல்லாம் சிறு நாற்காலிகளால் நிரப்பிவிடுவது, இதன் மூலம் குறைந்த இடத்தில் அதிக பேரை உட்காரவைத்துவிடலாம். வாடிக்கையாளர்களும். 'சோபாக்கள் எல்லாம் நிரம்பிவிட்டதால் தான் நாம் இப்படி அசவுகரியமாக உட்கார்ந்து காபி குடிக்கவேண்டியிருக்கிறது! என்று தங்களையே சமாதானப் படுத்தி கொள்வார்கள்.

தொடரும்...

## OXY-HYDROGEN GENERATOR

